**கலைஞர்களுக்கான திறந்த அழைப்பு: பன்மொழி குடும்ப கலைக் கழகம்**

எங்கள் மறுவடிவமைக்கப்பட்ட குடும்ப கலைக் கழகத்தின் ஒரு பகுதியாக மாதாந்திர அமர்வுகளை நடத்த இருமொழி (அல்லது பன்மொழி) கலைஞர்களிடமிருந்து Tŷ Pawb விண்ணப்பங்களை கோருகிறது.

**எங்களை பற்றி**
Tŷ Pawb என்பது ஒரு கலாச்சார சமூக அமைப்பு, அது கலைகளையும் சந்தைகளையும் ஒரே இடத்தில் இணைத்து வழங்குகிறது. இந்த சகவாழ்வு Wrexham -இன் கலாச்சார பாரம்பரியம் மற்றும் அடையாளத்திற்குள் சந்தைகளின் முக்கியத்துவத்தை கொண்டாடுகிறது. Tŷ Pawb என்பது சமூக மற்றும் குடிமைப் பிரச்சனைகள், சுற்றுச்சூழல், சுகாதாரம், கலாச்சார அடையாளம், நிலைத்தன்ம□ மற்றும் கல்வி உள்ளிட்ட விஷயங்களை விவாதிக்கும் இடமாகும்.

**பின்னணி**
தொடங்கப்பட்டதிலிருந்து குடும்ப கலைக் கழகம் Tŷ Pawb திட்டத்தின் ஒரு நிலையான பகுதியாக செயல்பட்டு வருகிறது, ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் கலைஞர்களின் தலைமையில் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பை குடும்பங்களுக்கு வழங்குகிறது. இந்த கழகம் குழந்தைகளுக்காக மட்டுமல்ல, பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களும் அவர்களின் படைப்பற்றலை வெளிப்படுத்த ஊக்குவிக்கிறது. 'உங்களால் முடிந்த கட்டணத்தை செலுத்துங்கள்' என்ற அடிப்படையில் இந்த கழகம் செயல்படுகிறது

Wrexham -இன் பலதரப்பட்ட சமூகங்களைப் பிரதிபலிக்கும் மற்றும் ஈடுபடுவதற்கான எங்களின் தற்போதைய பணியின் ஒரு பகுதியாக, வெல்ஷ் மற்றும் ஆங்கிலத்தை விட பரந்த அளவில் பேசப்படும் மொழிகளை இணைக்கும் வகையில் குடும்ப கலைக் கழகத்தின் அமைப்பில் மாற்றம் செய்கிறோம்.

**பன்மொழி**
குடும்பக் கலைக் கழகத் திட்டம் அனைத்துப் பின்னணிகளில் இருக்கும் குடும்பங்களையும் பங்கேற்க வரவேற்கும். கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், அமர்வுகள் இரு மொழிகளிலும் நடைபெறும், அது கலைஞரின் முதல்/கூடுதல் மொழி அல்லது ஆங்கில மொழியில் பங்கேற்க குடும்பத்தினர்களுக்கு வாய்ப்பளிக்கும். முதல் மொழியில் பேசுபவர்கள் மற்றும் ஆரம்பநிலை பேச்சாளர்கள் ஆகிய இருவருக்கும் பேசுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் மற்றும் ஆங்கிலம் அல்லது வேறு மொழியின்

முறையான கற்பித்தலை விட வேடிக்கையாக மற்றும் சுலபமாக கற்றுக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நான்கு கலைஞர்கள் இந்த நிகழ்ச்சியை வழிநடத்துவார்கள், ஒவ்வொருவரும் மாதத்திற்கு ஒரு அமர்வை வழிநடத்துவார்கள். குடும்பத்தினர்கள் கலந்துகொள்ள போதுமான பல்வேறு பொருட்கள் மற்றும் நுட்பங்களை செயல்பாடுகள் வழங்குகின்றன என்பதை உறுதிப்படுத்த கலைஞர்கள் அடிக்கடி சந்திக்க வேண்டும்.

**வழிநடத்துபவர்களின் விவரக்குறிப்பு**

- பதிவுசெய்யப்பட்ட சுயதொழில் புரிபவர் மற்றும் இங்கிலாந்தில் வேலை செய்யும் தகுதியுடையவர்
- மற்றொரு மொழியில் நன்கு சரளமாக பேசக்கூடியவராக இருக்க வேண்டும் அத்துடன் கூடுதலாக ஆங்கிலம் அல்லது வெல்ஷ் மொழியில் நன்கு சரளமாக பேசக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கான உயர்தர ஆக்கப்பூர்வமான பங்கேற்பு கலைச் செயல்பாடுகளை உருவாக்கி வழங்குவதில் அனுபவம், குழுச் சூழலில் பல்வேறு பயிற்சி மற்றும் திறன்களை வழங்கக்கூடியவராக இருக்க வேண்டும்
- பலதரப்பட்ட குடும்பங்களுக்கு அன்பான, வரவேற்புஅளிக்கும்மற்றும்ஊக்கமளிக்கும் அனுபவத்தை உருவாக்க முயற்சிசெய்கிறது
- எங்கள் பங்கேற்பாளர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எங்கள் பாதுகாப்பு கொள்கை நடைமுறைகளை நிலைநிறுத்த உறுதியாக இருக்க வேண்டும்
- இந்தப் பணி மேம்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் மற்றும் தடைச் சேவை (DBS) சரிபார்ப்புக்கு உட்பட்டது

**வழங்கக் கூடியவை**

கலை நிகழ்வு ஒருங்கிணைப்பாளருக்கு அமர்வு திட்டங்களை முன்கூட்டியே வழங்க வேண்டும்.

அமர்வுகளுக்கு முன்னதாக அதற்கு பொருத்தமான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் தயாராக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் (Tŷ Pawb பராமரிப்பாளர்களின் உதவியுடன் மேசைகள் மற்றும் நாற்காலிகளை அமைக்க வேண்டும்).
:6 ஆக்கப்பூர்வமான பயிற்சி வகுப்புகளை ஆராய்ச்சி செய்து, வடிவமைத்து வழங்க வேண்டும் மற்றும் அவற்றில் பின்வருவன இருக்க வேண்டும்:

- Wrexham -இன் கலாச்சார பன்முகத்தன்மையால் ஈர்க்கப்பட்டு செயல்பட வேண்டும் அல்லது நிகழ்ச்சியின் பிரதான கருத்தாக Wrexham இருக்க வேண்டும் .
- பல்வேறு கலை வடிவங்கள், நுட்பங்கள் மற்றும் பொருட்களை பயன்படுத்த வேண்டும்
- 4-11 வயது குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் .
- பங்கேற்பாளர்கள் பயன்படுத்தும் மொழியைப் பொருட்படுத்தாமல் அனைவரும் கலந்துகொள்ளும் விதத்தில் இருக்க வேண்டும்

பின்வருவன உட்பட எங்கள் அறிக்கையிடல் தேவைகளுக்காக தகவல்களை சேகரித்து பதிவு செய்ய வேண்டும்

- பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
- பங்கேற்பாளர்களின் கருத்துகள்
- புகைப்பட ஒப்புதல் படிவங்கள் மற்றும் அமர்வுகளின் புகைப்படங்கள் (இரண்டையும் எங்கள் சந்தைப்படுத்தல் அதிகாரியிடம் வழங்க வேண்டும்)

அமர்வின் முடிவில் பயன்படுத்தப்பட்ட இடம் மற்றும் குடும்பக் கலைக் கழக அலமாரி நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படுவதையும் அனைத்துப் பொருட்களும் உபகரணங்களும் பாதுகாப்பாகவும் நேர்த்தியாகவும் சேமித்து வைக்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

Tŷ Pawb உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கொள்கைக்கு இணங்க செயல்பட வேண்டும் மற்றும் திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவரையும் மரியாதையான, சமமான முறையில் நடத்த வேண்டும்

**கட்டணம் மற்றும் காலவரிசை**

ஆண்டு 2023/24 -இல் மொத்தம் 40 அமர்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

அதாவது, திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு கலைஞருக்கும் ஒரு அமர்வுக்கு £125 வீதம் 10 அமர்வுகளுக்கான கட்டணம் வழங்கப்படும், ஆக மொத்தம் £1250 கட்டணமாக வழங்கப்படும்.

கூடுதலாக, ஒவ்வொரு கலைஞரும் Tŷ Pawb -இல் கிடைக்காத சிறப்புப் பொருட்கள் அல்லது உபகரணங்களை ஏற்பாடு செய்வதற்கு £250 வரையிலான திட்ட பட்ஜெட்டை பெறுவார்கள்.

பன்முக கலாச்சார குடும்ப கலைக் கழக நிகழ்வுகள் பிப்ரவரி 4, சனிக்கிழமை முதல் ஆரம்பம் ஆகும.

**விண்ணப்பம் செய்யும் முறை**

இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க, CV மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைய இணைப்புகளை மின்னஞ்சல் செய்யவும் heather.wilson@wrexham.gov.uk இணைப்புகளில் ஒரு போர்ட்ஃபோலியோ, 5 நிமிடங்களுக்கு குறைவான வீடியோக்கள், சமூக ஊடகங்கள் அல்லது பணிக்கு நீங்கள் பொருத்தமானவர் என்பதை நிரூபிக்கும் பிற உள்ளடக்கம் ஆகியவை அடங்கும். இந்தப் பணிக்கான உங்கள் விண்ணப்பத்தை, மின்னஞ்சல் அனுப்பவும்

கூடுதல் மொழிகள் பேசும் (பிரிட்டிஷ் சைகை மொழி உட்பட) அனைவரிடமிருந்தும் விண்ணப்பங்களை வரவேற்கிறோம், குறிப்பாக Wrexham -இல் அதிகப் பயன்பாட்டில் இருக்கும் போலிஷ் (2.49%) மற்றும் போர்த்துகீசியம் (0.53%).

தகுதியானவர் Tŷ Pawb -இன் 'Arte Util' நெறிமுறைகளை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

**பன்முக கலாச்சார குடும்ப கலைக் கழக நிகழ்வுகள் நடக்கும் தேதிகள்:**

04/02/23 – கலைஞர்1

11/02/23 – கலைஞர் 2

18/02/23 – கலைஞர் 3

25/02/23 - அமர்வு இல்லை (அரையாண்டு)

04/03/23 – கலைஞர் 4

11/03/23 – கலைஞர் 1

18/03/23 – கலைஞர் 2

25/03/23 – கலைஞர் 3

01/04/23 – கலைஞர்4

08/04/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)

15/04/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)

22/04/23 - கலைஞர் 1

29/04/23 - கலைஞர் 2

06/05/23 – கலைஞர் 3

13/05/23 – கலைஞர் 4

tŷ pawb

Marchnadoedd —— Cymuned —— Celfyddydau
Markets —— Community —— Arts

20/05/23 – கலைஞர் 1
27/05/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
03/06/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
10/06/23 – கலைஞர் 2
17/06/23 – கலைஞர் 3
24/06/23 – கலைஞர் 4
01/07/23 – கலைஞர் 1
08/07/23 – கலைஞர் 2
15/07/23 – கலைஞர் 3
22/07/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
29/07/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
05/08/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
12/08/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
19/08/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
26/08/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
02/09/23 – கலைஞர் 4
09/09/23 – கலைஞர் 1
16/09/23 – கலைஞர் 2
23/09/23 – கலைஞர் 3
30/09/23 – கலைஞர் 4
07/10/23 – கலைஞர் 1
14/10/23 – கலைஞர் 2
21/10/23 – கலைஞர் 3
28/10/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)
04/11/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்1
11/11/23 – கலைஞர் 4
18/11/23 – கலைஞர் 1
25/11/23 – கலைஞர் 2
02/12/23 – கலைஞர் 3
09/12/23 – கலைஞர் 4
16/12/23 – கலைஞர் 1
23/12/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)

tŷ pawb

Marchnadoedd —— Cymuned —— Celfyddydau
Markets —— Community —— Arts

30/12/23 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்களள)

06/01/24 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)

13/01/24 – கலைஞர் 2

20/01/24 – கலைஞர் 3

27/01/24 – கலைஞர் 4

03/02/24 – கலைஞர் 1

02/02/24 – கலைஞர் 2

09/02/24 – கலைஞர் 3

16/02/24 – கலைஞர் 4

23/02/24 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்கள்)

30/02/24 - அமர்வு இல்லை (பள்ளி விடுமுறை நாட்களள